நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி.V.பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02–ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண்.1359/2026
**CNR NO.TNTH020022222026**
*****

அய்யம்பெருமாள் (29/2026),
த/பெ. வெள்ளைபாண்டி ....மனுதாரர் /சொத்தின் உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக – காவல் சார்பு ஆய்வாளர்,
அல்லிநகரம் காவல் நிலையம்,
குற்ற எண்.252/2026,
U/s. 303(2) BNS, 21(4) MMDR Act ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/சொத்தின் உரிமையாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மல்லீஸ்வரன்,M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கிறஞர் நிலை–II அவர்கள் ஆஜராகினார்.

**உத்தரவு**

1) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 37 BZ 7250 என்ற எண் கொண்ட Ashok Leyland Limited கம்பெனியை சேர்ந்த ALCT 1616 XL என்ற மாடல் Yellow Colour Tipper லாரியை மனுதாரர் வசம் ஒப்படைக்க கோரி மனுதாரர் இம்மனுவை U/s.497, 503 BNSS ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின் சுருக்கம்**

மனுதாரர் தனது மனுவில் மேற்படி மனுதாரருக்கு சொந்தமான TN 37 BZ 7250 என்ற எண் கொண்ட Ashok Leyland Limited கம்பெனியை சேர்ந்த ALCT 1616 XL என்ற மாடல் Yellow Colour Tipper லாரியை அல்லிநகரம் காவல் நிலைய குற்ற எண்.252/2026, U/s.303(2) BNS, 21(4) MMDR Act–கீழ் கைப்பற்றப்பட்டு காவல் துறை பொறுப்பில் இருந்து வருகிறது என்றும், மேற்படி லாரி இல்லாததால் மனுதாரரதது வேலைகள் தடைப்பட்டு மிகுந்த சிரமமாக உள்ளது என்றும், மேற்படி லாரி காவல்நிலையத்தில்

ஓடாமல் நிற்பதனால் பழுதடைய வாய்ப்புகள் உள்ளது என்றும், மேற்படி வாகனத்தை ஒப்படைக்கும் பட்சத்தில் சமூகம் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதாகவும், வாகனத்தின் ஆர்.சி. புக் நகலை இணைத்துள்ளதாகவும், மேற்படி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 37 BZ 7250 என்ற எண் கொண்ட Ashok Leyland Limited கம்பெனியை சேர்ந்த ALCT 1616 XL என்ற மாடல் Yellow Colour Tipper லாரியை இடைக்கால பொறுப்பில் மனுதாரர்/புகார்தாரர் வசம் ஒப்படைக்கவேண்டுமாய் மனுவில் கூறியுள்ளார்.

3) <u>அரசு மற்றும் எதிர் மனுதாரருக்கு தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது பதில் பெறப்பட்டது</u>

இவ்வழக்கு சொத்தான லாரியை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் மனுதாரர் லாரியை விற்பனை செய்யக்கூடும் என்பதாலும், மேலும், வழக்கின் சொத்தான லாரியை நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் காலதாமதம் செய்யக்கூடும் என்பதாலும், வழக்கின் சொத்தான TN 37 BZ 7250 என்ற எண்ணுள்ள லாரியை மனுதாரர் வசம் ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.</u>

மனுதாரர்/சொத்தின் உரிமையாளர் தரப்பில் வழக்கில் அல்லிநகரம் போலிசாரால் கைப்பற்றப்பட்ட TN 37 BZ 7250 என்ற எண் கொண்ட Ashok Leyland Limited கம்பெனியை சேர்ந்த ALCT 1616 XL என்ற மாடல் Yellow Colour Tipper லாரி காவல் நிலையத்தில் ஓடாமல் நிற்பதனால் பழுதடைய வாய்ப்புகள் உள்ளது என்றும், மேற்படி லாரி இல்லாததால் மனுதாரரது வேலைகள் தடைப்பட்டு மிகுந்த சிரமமாக உள்ளது என்றும், எனவே லாரியை மனுதாரர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டியது அவசியமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக, எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட பதிலில் மனுதாரர்/எதிரி லாரியை விற்பனை செய்யக்கூடும் என்பதாகவும், மேலும், வழக்கின் சொத்தான வாரியை நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் காலதாமதம் செய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ளதை கருத்தில்கொண்டு மனுதாரர் வசம் வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 37 BZ 7250 என்ற எண் கொண்ட Ashok Leyland Limited கம்பெனியை சேர்ந்த ALCT 1616 XL என்ற மாடல் Yellow Colour Tipper லாரியை இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கும் பட்சத்தில் மீண்டும் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்து 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02–ம் நாள் செவ்வாய்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.02 16:23:26 +0530

நீதித்துறை நடுவர்,
தேனி.